**மஹியங்கனை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 18 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 31 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து, மஹியங்கனை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,151,692 தொகையான கடன்கொடுத்தோர்களிற்கான ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு இரண்டு சந்தர்ப்பங்களில் தவறுதலாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண விஷேட அபிவிருத்தி நிதியத்தின் கீழ் உலஹரியா நுழைவு வீதியினை கொங்கிறீட் இடுவது தொடர்பிலான கடன்பட்டோர்களிற்கான ஏற்பாடு ரூபா 200,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) தொடர்ந்து வரும் ஆண்டிற்காக ஏற்பட்ட ரூபா 75,369 செலவீனத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 53,900 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட வேறு வகையான அலுவலக உபகரணங்களிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பொருள் மெய்மையின்மையால் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 32,340 பெறுமதியான புத்தகங்களின் பற்றாக்குறை நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிலுவை வருமானங்களின் மீதி ரூபா 12,523,050 ஆக இருந்த போதிலும் பதிவேடுகளின் பிரகாரம் இது ரூபா 12,227,148 ஆகவிருந்தது.

(ஆ) கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 கடை முதலாளிகளிடமிருந்து பெறவேண்டிய வாடகையானது ரூபா

26,300 ஆகவிருந்ததுடன் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,600 ஆக காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 22,275,720 ஆகவிருந்த அதேநேரம் அத்திகதியிலுள்ளவாறான செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 30,938,256 ஆகவிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 9,819,882 பெறுமதியான சொத்துக்களின் நான்கு சொத்து உருப்படிகளானது தேவையான தகவல் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 132(எ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 63,690 தொகையான நன்கொடைகளானது குறித்த விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அனுமதியில்லாமல் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) பிரிவுகள் 158 மற்றும் 159 | அனைத்து வருமானமும் அறவிடப்பட்டு சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதும், ரூபா 438,875 நிலுவையாகவுள்ள கடை வாடகை மற்றும் ரூபா 2,550,307 வீதங்கள் மற்றும் வரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 43,466 தொயையான இரண்டு காலங்கடந்த வைப்புக்கள் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | |
| (i) விதி 5(7) | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 180 | ரூபா 15,000 பிணையங்கள் இரண்டு உத்தியோகத்தர்களால் வைப்பிலிடப்பட்டிருக்க வில்லை. |
| (iii) விதி 218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பொருள் மெய்மையாய்வு 2016 ஆம் ஆண்டிற்காக |

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவு | இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் பதவிகள் வறிதாக்கம் செய்த 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 46,511 உத்தியோகத்தர் கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பந்தி மற்றும் 1982 இன் 03 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பந்தி | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உதவு தொகையினை உரிய தினத்தில் செலுத்தாமை காரணமாக 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 39,333 மிகையறவீடு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 1985 இன் 01 ஆம் இலக்கத்தால் திருத்தப்பட்டவாறு 1958 இன் 13 ஆம் இலக்க (திருத்தம்) ஊழியர் சேமலாப நிதியத்தின் 10 ஆம் பிரிவு | ரூபா 68,436 மிகை அறவீடானது 2002 இலிருந்து 2014 இற்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தவேண்டியிருந்தது. |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,479,131 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,292,071 ஆகவிருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 சனவரி 01 இல் உள்ளவாறான நிலுவையாகவுள்ள அனைத்து வருமான நிலுவைகளின் சேகரிப்பின் செயலாற்றல் 57 சதவீதமாகவிருந்த அதேநேரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய மீதிகள் ரூபா 1,483,847 ஆகவிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பற்றுச்சீட்டு வருமானத்தில், 65 சதவீதம் அறவிடப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாகவுள்ள மீதி ரூபா 1,066,459 ஆகவிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 மற்றும் 159 ஆம் பிரிவின் பிரகாரம் கடைத்தொகுதியிலுள்ள பதினேழு கடைகள் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்கவில்லை.

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 6,000,791 ஆகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 138,650 கிரயமான முச்சக்கர வண்டி சபையின் இடங்களின் 2016 ஆகஸ்ட் 31 இன் பின்னர் விளைவற்றிருந்தது.

### 3.2 திண்மக்கழிவு முகாமைத்துவம்

(அ) 2013 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் தேசிய திண்ம கழிவு முகாமைத்துவத்திற்காக ரூபா 13,647,008 தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு இது தவறியிருந்தது.

(ஆ) ரூபா 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் (திருத்தப்பட்டது) 1980 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பகுதி II இன் 10(i) (ஆ)(எ) பிரிவின் பிரகாரம், சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கின்ற மூலப்பொருட்கள் மற்றும் திண்மக்கழிவு போன்றன போதிய கட்டுப்பாட்டுடன் அகற்றப்பட வேண்டிய போதிலும், பதுளை, மாயன்ஹல பிரதான வீதியிலிருந்து 250 மீற்றரை சுற்றியமைத்து 5 ஏக்கர் காணியில் முறையற்ற ரீதியில் இவை அகற்றப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவீன முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிர்மாணங்கள் மீதான கட்டுப்பாடு
(ஆ) களஞ்சிய நிர்வாகம்
(இ) வருமான நிர்வாகம்